

சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் மேற்கு பகுதி சார்பில் பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவின், திராவிடத் தொடர்–17வது நிகழ்ச்சியாக "திராவிட அடி வேரு! மகத்தான வரலாறு! என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம், சென்னை, அகரம், பெரவள்ளூர் சதுக்கத்தில் சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், கொளத்தூர் மேற்கு பகுதி கழக செயலாளர் எ.நாகராசன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி –, நாஞ்சில் சம்பத், கரூர் முரளி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில் இரா.கிரிராஜன் எம்.பி., பி.கே.மூர்த்தி, பகுதி கழக செயலாளர் ஐ.சி.எப்.வ.முரளிதரன், சி.மகேஷ்குமார், கே.சந்துரு, சரிதாமகேஷ்குமார் எம்.சி, டி.லோகேஷ், தேவஜவகர், எஸ். பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், கொளத்தூர் மேற்கு பகுதி நிர்வாகிகள்: இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர்.காஞ்சனா, பி.சூரி. கொளத்தூர் மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: எஸ்.முருகன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ். என்.ராமச்சந்திரன், எம்.டி.தமிழ்செல்வன், மாமன்ற உறுப்பினர்கள்: கே.சாரதா, எம். தாவூத்பீ, சி.ஸ்ரீதணி, டி.யோகபிரியா, பி.அமுதா மற்றும்கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இப்பொதுக்கூட்டத்தில் வட்ட கழக செயலாளர் எம்.ஜெ.சி.பாபு, ப.அதிபதி நன்றி கூறினர்.



மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் நேற்று (15.10.2024) சென்னை நந்தனம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் 24 மணி நேர அவசர கால கட்டுபாட்டு மையத்தில், வடகிழக்கு பருவமழை முன் ஏற்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கு தேவைப்படும் படகுகளை அனுப்புவது குறித்தும் துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

### என்.அனிபா தலைமை ! இரா.லட்சுமணன் முன்னிலை !

## ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயற்குழுக் கூட்டம் !

### ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ ஆலோசனை வழங்கினார் !

சென்னை அக்:16

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயற்குழு கூட்டம் (14.10.2024 திங்கட்கி ழமை) மாலை 4.00 மணியளவில் பகுதி அலுவலகத்தில் அவைத் தலைவர் என்.அனிபா தலைமையில் நடைபெற்றது.

பகுதி கழக செயலாளர் இரா.லட்சுமணன் முன்னிலை வகித்தார். ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் இரா. வெற்றி வீரன், பகுதி நிர்வாகிகள் கே.பாலு, எம். வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், வட்டக் கழக செயலாளர்கள் என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், ந. கோதண்டன், மா.நாக ராஜன், ச. தமிழ்செல்வன், பொ.து. ராஜா,வட்ட துணை செயலாளர்கள் வி.மோகன், எல்.ரமேஷ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

1.29.10.24 அன்று வெளியிடப்படும் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு மற்றும் அடுத்த மாதம் (09.11.2024) (10.11.2024) மற்றும் (23.11. 2024) (24.11.2024) அன்று நடைபெறும் புதிய வாக்காளர் சேர்த்தல் நீக்கல் முகாமில் வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், அனைவரும் கலந்து கொள்ளவேண்டும்.

2.கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா. இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

3.கழக மூத்த முன்னோடி திரு முரசொலி செல்வம் அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. ஆகிய மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆர். டி.ராஜா நன்றி கூறினார்.

### தருமபுரி மேற்கு மாவட்டத்தில்

## கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா - மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி!

தருமபுரி, அக். 16 -

தி.மு.க. இளைஞரணி மற்றும் கலைஞர் தொலைக் காட்சி இணைந்து நடத்தும் 'என் உயிரினும் மேலான' கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி மாநிலம் முழுவதும் மாவட்ட அளவில் கடந்த மாதம் நடைபெற்றது.

அதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மண்டல அளவிலான பேச்சுப் போட்டி தருமபுரி தனியார் கல்லூரியில் நடைபெற்றது. நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து வெற்றி பெற்ற மாணவ - மாணவியர்கள் இந்த மண்டல அளவிலான பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டனர்.

இந்த போட்டிக்கு நடுவர்களாக ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினரும் கழக மருத்துவரணி மாநில செயலாளருமான மருத்துவர் எழிலன்,கழக மாநில மாணவரணி தலைவர் ராஜீவ் காந்தி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் டான் அசோக் ,ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சி மாநில இளைஞரணி துணை செயலாளர் பி.எஸ்.சீனிவாசன் தலைமையிலும், தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர்.பி. பழனியப்பன், கிழக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்ரமணி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஆர் சிவகுரு,எம்.ஜி.எஸ். வெங்கடேஸ்வரன்,மற்றும் துணை அமைப்பாளர்கள் பி.என்.சி.மகேஷ்குமார், தீ. கோடீஸ்வரன், பி.டிஹரி பிரசாத், எ.நாசர், தங்கச்செழியன், வழக்கறிஞர்.அசோக் குமார், என்.எஸ்.கலைச் செல்வன், கே.ஆர்.சி. செல்வராஜ், பெ.ராஜ கோபால், த. கார்த்தி,ஆர்.பி.முத்தமிழன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி முன்னிலையில் அயப்பாக்கம் ஊராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மின் மோட்டார், இயந்திர உபகரணங்கள், ஊராட்சி பணியாளர்களுக்கு மழை கோட், கொசு வலை, இயந்திரம், மரம் வெட்டும் இயந்திரம், ஜெ.சி.பி. இயந்திரம், லாரி, டிராக்டர் போன்றவை தயார் நிலையில் ஏற்பாடு செய்து மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் மின்மோட்டார் மூலம் மழை நீரை அகற்றுதல், ஜெ.சி.பி. இயந்திரங்கள் மூலம் மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளில் மழை நீர் அகற்றுதல், மழையால் சாய்ந்த மரங்களை அகற்றுதல், பணியாளர்களுக்கு சிற்றுண்டி வழங்கல், மழை வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காலை மதியம் மாலை 2000 பேருக்கு உணவு வழங்கல் போன்ற செயல்களை போர்க்கால அடிப்படையில் பணியாற்றி அனைத்து ஏற்பாடுகளையும் ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி ஏற்பாட்டில் செயல்படுத்தப்பட்டது. உடன் வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி கோட்ட பொறியாளர், உதவி பொறியாளர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார மேற்பார்வையாளர், ஒன்றிய கவுன்சிலர், வார்டு உறுப்பினர்கள், மற்றும் ஊராட்சி பணியாளர்கள் உள்ளனர்.

# முரசொலி செல்வம் மட்டுமல்ல; தி.மு.க.வின் செல்வமும்தான்!



அப்போது அவரை நான் நேரடியாக சந்தித்திருக்கவில்லை. ஒரு பயணத்தில் இருந்த போது தோழர் ஒருவர் அலைபேசியில் அழைத்து அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சியில் நடைபெற்ற விவாதத்தில் நான் தெரிவித்த கருத்துக்கள் எனது பேச்சு மொழியிலேயே விவாதம் நடைபெற்ற வடிவத்திலேயே முரசொலியில் வந்திருப்பதாக குறிப்பிட்டார். இபேப்பரை பார்ப்பதற்கு நேரமாகிக் கொண்டிருந்தது. நண்பர் ஒருவர் இதற்கிடையில் அதை படம் எடுத்து அனுப்பியிருந்தார். பிறகு, நாகர்கோவில் சென்று சேர்ந்த பிறகு நான் அதை வாசித்தேன். அதன் பிறகு கலைஞர் தொலைக்காட்சியின் ப. திருமாவேலன் அவர்கள் மூலமாக முரசொலி செல்வம் அவர்கள் அந்த விவாதத்தைக் கேட்டு அப்படியே வெளியிட சொன்னதாக சொன்னார். முரசொலியில் பணிபுரியும் முத்தையா அவர்களோடு ஏற்கனவே அலைபேசி வாயிலாக சிலமுறை பேசியிருக்கிறேன். அவரிடம் செல்வம் அவர்களின் அலைபேசி எண்ணை வாங்கி செய்தி மட்டும் அனுப்பியிருந்தேன். அதன் பிறகு அதேபோன்று சில விவாதங்களை தொகுத்து முரசொலி வெளியிட்டிருந்தது. சில கட்டுரைகளும் கூட தீக்கதிரில் வந்ததை மறுபிரசுரம் செய்திருக்கிறார்கள். கடைசியாக தோழர் சீத்தாராம் யெச்சூரி அவர்கள் மறைவை யொட்டி நான் தீக்கதிரில் எழுதியிருந்த புகழஞ்சலி கட்டுரையை முரசொலி மறுபிரசுரம் செய்திருந்தது.



**க.கனகராஜ்**

மாநில செயற்குழு உறுப்பினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலக் குழு

இடையில் அநேகமாக நான்குமுறை அவரோடு பேசியிருப்பேன். பாராட்டோ, விமர்சனமோ அதிகபட்சம் 10 வார்த்தைகளைத் தாண்டி இருந்திருக்காது. நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு பிறகு முதலமைச்சரும் தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து நன்றி தெரிவிப்பதற்காக சென்றிருந்தோம். அன்று தான் முதலமைச்சரின் இல்லத்தில் முதன் முதலாக அவரை நேரடியாக சந்தித்தேன்.

என்னைப் பார்த்ததும் முதலமைச்சரிடம் திரும்பி என் கட்டுரைகளைப் பாராட்டி நாமும் முரசொலியில் வெளியிட்டிருக்கிறோம் என்று என்னை முதலமைச்சருக்கு அறிமுகப்படுத்தினார். அதற்கு பிறகு அலைபேசியில் கூட நாங்கள் பேசிக் கொண்டதில்லை. நேற்று நாகர்கோவிலில் இருந்த போது முதலமைச்சரின் பதிவை பார்த்து தான் அவரது மறைவை நான் தெரிந்து கொண்டேன். வருத்தம் என்னை தொற்றிக் கொண்டது. ஒருமுறைக்கு மேல் சந்தித்தது இல்லை என்ற போதும் பேசிய தருணங்களில் கூட அவர் 10 வார்த்தைகளுக்கு மேல் பேசியதாக நினைவில்லை என்ற போதும் இனம்புரியாத ஒரு மரியாதை அவர் மீது ஏற்பட்டிருந்தது.

எனவே, அவரை இழந்தது இயல்பாகவே வருத்தத்தை ஏற்படுத்தியது. இன்று அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக சென்றிருந்தேன். கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி. ராமகிருஷ்ணன், மாநில செயலாளர் தோழர் கே. பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தோழர் ஆர். முத்தரசன் ஆகியோர் மரியாதை செலுத்திவிட்டு முதலமைச்சரிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் வாசலுக்கு வந்துவிட்டேன். எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன் அவர்களும், தமிழன் பிரசன்னா அவர்களும் உள்ளே செல்லுமாறு கூறினார்கள்.

நான் இடநெருக்கடியைச் சொல்லி வெளியே செல்ல முயற்சித்த போது தலைவர் கூப்பிடுகிறார் போங்கள் என்றார்கள். நான் திரும்பிய போது முதலமைச்சர் உங்கள் கட்டுரைகளைப் பற்றி அவர் பலமுறை தன்னோடு பேசியிருக்கிறார் என்பதை தெரிவித்தார். ஏராளமான கட்டுரைகளை வெளியிட்ட மனிதன் சில நேரங்களில் என்னை அழைத்து பாராட்டியதே அவருடைய பெருந்தன்மை. அதை முதலமைச்சரிடமும் பகிர்ந்திருக்கிறார் என்று அறிந்த போது நான் நெகிழ்ந்து போனேன்.

எந்தவொரு கட்சிக்கும் பத்திரிகை என்பது மிக, மிக முக்கியமான ஆயுதம், கேடயம். பல நேரங்களில் பத்திரிகைகள் ஒரு செய்தியை பிரசுரிப்பதும், பிரசுரிக்காமல் இருப்பதுமே அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தி விடும். கட்சியின் தலைவர்களே உணர்ச்சி வேகத்தில் பேசினாலும் பத்திரிகை ஆசிரியர்கள் அதன் தாக்கத்தை கணக்கில் கொண்டு எடிட் செய்கிற அதிகாரம் படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் மிக முக்கியமான தடம் பதித்த ஒரு கட்சியின் அதிகாரப்பூர்வ நாளிதழுக்கு அதன் தலைவருக்கு அடுத்தபடியாக ஆசிரியராக இருப்பது என்பது மகத்தான பெருமை தான்.

ஒரு கட்சியின் உறுப்பினருக்கு அதை விடவும் உயர்ந்த மரியாதை எதுவும் இருந்து விட முடியாது. அந்த மரியாதையை திமுக அவருக்கு வழங்கியிருந்தது. அதற்கு கைமாறு செய்யும் வகையிலும் வலு சேர்க்கும் முறையிலும் சிலந்தி என்கிற பெயரில் அவர் அரசியல் விமர்சன கட்டுரைகளை எழுதி வந்தார். அதை தொடர்ச்சியாக வாசிப்பவர்களுக்கு தி.மு.க.வின் அரசியல் நிலைபாடுகளில் உறுதியாக காலூன்றி தரவுகளோடு கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களுக்கும் புரியும் வகையில் எழுதிவந்தார் என்பதை உணர முடியும்.

அந்த கட்டுரைகளுக்கு நானும் ஒரு ரசிகன். எங்கள் கட்சியை விமர்சித்தும் அவர் எழுதியிருக்கிறார். அந்த கருத்துக்களோடு உடன்படாத போதும் அவர் அந்த கருத்தை முன்வைக்கிற முறை பாராட்டுக்குரியதாகவே இருக்கும். அவரது மறைவு முரசொலிக்கு மட்டுமல்ல; தி.மு.க.வுக்குமே பேரிழப்பு தான். அவர் முரசொலி செல்வம் மட்டும் அல்ல; தி.மு.க.வின் செல்வமும்தான்.



பருவமழையொட்டி திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆய்வு மேற்கொண்டு சாலை மற்றும் கால்வாய்கள் தரைப்பாலத்தில் தேங்கியிருக்கும் மழை நீரை பார்வையிட்டு அகற்றும் பணியில் ஈடுபட்டார். மேலும் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் உடனடியாக மழை நீரை வெளியேற்ற சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்தார். அருகில் ஆவடி மாநகர மேயர் உதயகுமார் ஆவடி மாநகர் ஆணையர் கந்தசாமி ஆவடி பகுதி கழகச் செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாந்த், ஜி.ராஜேந்திரன், நகர் மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி மற்றும் மாநகராட்சி நகராட்சி அதிகாரிகள் மாமன்ற நகர மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.